உ
சிவமயம்

Nev:
aperin Ceylon
P. M. G. NO. H. A
69/300 of 1939.

இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை போய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௯] யாழ்ப்பாணம் — சர்வசித்து ௵ ஆவணி ௴ ௧௩ ௨ (1947 ஆகஸ்ட் 29 வெள்ளிக்கிழமை) [இல ௪௧

பிரார்த்தனை

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்பஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

விழிக்குத்துணை திருமென் மலர்ப்பாதங் கள்மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணை மரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங்கோடன் மயூரமுமே.

—அருணகிரிநாதர்

மலேயா இலங்கையர்

அரசாங்கப் பிரதிநிதி இருக்கவேண்டுமாம்

இலங்கை டொமினியன் அந்தஸ்து அடையவிருக்கிறது. இந்த நிலையில், மலேயாவில் உள்ள இலங்கை மக்களின் சுபீட்சத்தைக் கவனிக்க இலங்கை தன் பிரதிநிதி ஒருவரை அங்கே நியமிக்கவேண்டும். இந்த விஷயத்தை இலங்கை யரசாங்கத்துக்குத் தெருட்டுதற்கு, மலேயா இலங்கையர் சங்கத் தலைவரும், மலேயன் சமஷ்டி மந்திரசபையில் அங்கத்தவருமாயுள்ள ஸ்ரீ ஜீ சி ஸி. துரைசிங்கம் இலங்கைக்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

இவ்விஷயமாக ஸ்ரீ துரைசிங்கம் "மலேயன்கவர்னர்ஜெனர" லுடனும் மலேயாத் தேசாதிபதியுடனும் கலந்துபேசியதாகத் தெரிகிறது. இலங்கைமக்கள் நலனைக் கவனிக்க, மலேயாவில் இலங்கையரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவர் இருத்தல் மிகவும் அவசியம்தான் என்பதை அவ்விருவரும் ஒப்புக்கொண்டனர்.

ஸ்ரீ துரைசிங்கம் இன்னும் சில தினங்களில் இலங்கைக்கு வந்து அதிகாரிகளைக் கண்டு இவ்விஷயமாகப் பேசுவார்.

விமானப் போக்குவரத்து

தென்னிந்தியாவுக்குச் செய்ய முயற்சி

தென்னிந்தியாவிலே, மதுரை திரிச்சினாப்பள்ளி, பங்களூர், கொச்சி, திருவாங்கூர் முதலிய இடங்களுடன் ஆகாய விமானமூலம் தொடர்புவைத்து இந்த இடங்களுக்கு ஓர் விமானப் போக்குவரத்துப் பாதை ஏற்படுத்த இலங்கையரசாங்கம் முயற்சி செய்கிறது. இலங்கையிலேயுள்ள இந்திய வர்த்தகரிடம் இவ்விஷயமாக அரசாங்கம் ஆலோசனை கேட்டிருக்கிறது. திருநெல்வேலியிலும் விமானம் தங்க வசதிகள் செய்யவேண்டுமென்று இலங்கை இந்திய வர்த்தக சங்கம் ஆலோசனை கூறியிருக்கிறது.

இங்கே வசிக்கும் பல இந்திய வர்த்தகர் திருநெல்வேலியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்றும் தினந்தோறும் குறைந்தபட்சம் 15 பேராவது திருநெல்வேலிக்குப் போய்வருவர் என்றும் கூறப்படுகிறது.

சிந்தையை அடக்கல்

(முற்றொடர்)

சிந்தையை அடக்கி ஆன்மாவிடத்திலோ பகவானிடத்திலோ நிறுத்தப் பழகுவோர் தமது மனம் அலையும் காரணத்தை ஆராயவேண்டும்; என்னென்ன பொருள்களைநோக்கி மனம் தானாகச் செல்கிறது என்பதைக் கண்டறியவேண்டும் எந்தப் பொருளில் மனம் தானாகக் கவிகிறதோ அதையே துணையாகக்கொண்டு மனத்தை உயர்த்த முயலுதல் நன்று. மனைவிமக்களைத் துறந்து குருவையடைந்த ஒருவர்பகவானைத்தியானிக்கும் முறையை உபதேசிக்கப் பெற்றார். அவ்வாறே பழக முயன்றார். ஆயினும் மனம் பகவானைநோக்கிச் செல்ல மறுத்தது. பட்டபாடெல்லாம் வீணாயிற்று. மறுபடியும் குருவை நாடித் தமது துயரத்தை அறிவித்தார். 'உன் மனம் எதை நோக்கிச் செல்கிறது?' என்றார். வீட்டிலுள்ள காராம்பசுவை நோக்கி ஓடுகிறது என்று பதிலளித்தார் சீடர். குரு உடனே "சரி; அப்படியாயின், காராம்பசுவையேபற்றித் தியானம்பழகு" என்று தைரியம் கூறினார். தியானம் சீடர்க்கு எளிதாயிற்று; ஒருமணிமட்டுமல்ல இரண்டுமணி நேரம் எளிதாகத் தியானித்தார். சிலநாளைக்குப்பின் மறுபடியும் குருவிடம் தமது அனுபவத்தைக் கூறலும். அவர் "இன்னும் பதினைந்துநாள் அதையேதியானித்துவா; பின் பசுவின் கண்களையே தியானம்பண்ணுக" என்று போதித்தார். இவ்வாறு பழகவே சீடர் சிறிது காலத்தில் தியானத்தில் மூழ்கலானார்: நினைப்பவன் நினைக்கப்படும் பொருள் நினைப்பு மூன்றும் ஒன்றான நிலையும் விரைவில் வந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு சிஷ்யைக்குப் பகவானைச் சிந்திக்கும் முறையை உபதேசித்தார். பகவானிடம் மனதை நிறுத்தமுடியாமையைப்பற்றி அம்மங்கையார் பின்னர் அவரிடமுறையிட்டார். 'அம்மா உன்மனம் பகவானை விட்டு எதனிடம் செல்கிறது?' என்று கேட்டார் அவர். 'எனக்கு உறவான ஒரு குழந்தையைப்பற்றிய எண்ணமே என்னைப் பீடிக்கின்றது' என்றார் அம்மையார். 'அக் குழந்தையைக் கிருஷ்ண

தொடர்ச்சி 6-ம் பக்கம்

சைவர் தம் கடன்

(ஸ்ரீ கெ. ஆறுமுக நாவலர்)

பழனி சைவசித்தாந்த சபையின் 6-வது ஆண்டு விழாவில் "தொண்டன்" ஆசிரியர் ஸ்ரீ கெ, ஆறுமுக நாவலர் நிகழ்த்திய தலைமைப் பேருரையின் சாரம் பின் வருமாறு:—

இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு சமயத்தினர்க்கும் தங்கள் தங்கள் சமயப்பெயர், சமயக்குரவர், சமய நூற்கள் இவை நன்கு தெரியும். அவர்கள் அதன்படி யொழுகி தங்கள் தங்கள் சமயத்தை வளர்க்க அரும்பாடுபட்டுவருகின்றனர். சைவ சமயத்தினர் தங்கள் சமயத்தின் பெயரையோ, குரவர்களின் பெருமைகளையோ, நூற்களின் அருமைகளையோ, அறியாதவராய் அச்சமய ஒழுக்கத்தைக் கைவிட்டவராய் அதன் வளர்ச்சிக்கு ஆவன புரியாது இருப்பது மிக மிக வருந்தத்தக்கதே,

'சிவம்' என்பதற்கு ஒப்பற்ற மெய்ப்பொருளாகிய இறைவன் என்று பொருள். அச்சிவனைக் கடவுளாகக் கொண்டு ஒழுகுகின்றவர்கள் 'சைவர்' எனப்படுவர். சைவர்களது சமயம் சைவம் எனப்படும்.

சித்தாந்தம் என்பதைப் பிடிவாதம் என்று சிலர் நினைக்கிறார்கள். சித்தாந்தம் என்பதின் உண்மைப் பொருளினை ஆராய்வோம். கடவுளையடைவதற்குப் பற்பல மார்க்கங்களைப் பற்பலர் கூறியுள்ளார்கள். அம்மார்க்கங்களில் பல பிற்கால ஆராய்ச்சிக்குச் சிறிதும் பொருத்தமற்றதாய்ப் போயின. விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பொருத்தம் அற்றதாயினசில. மேலுலக ஆராய்ச்சிக்குப் பொருத்தமற்றன சில. மரணத்தின் பின் அடையும் மனிதர் நிலைக்குப் பொருத்தமற்றன மிகப்பல. இவ்வாராய்ச்சிகளில் புகுந்தரெவரண்ட் மோஸஸ் போன்ற அறிஞர்கள் தாங்கள் இதுவரையும் கண்டதும் கேட்டதும் ஆகிய முடிவுகள் தவறு எனவும், வேறு சில முடிவுகள் இருக்கவேண்டும் எனவும் கூறுகின்றார்கள். எக்காலத்திற்கும் எத்தகைய ஆராய்ச்சிக்கும் டம் கொடுத்து இறைவன் நிலையினையும், மக்களின் மாண்பினையும், இறைவனை அடைதற்குரிய மார்க்கங்களையும் முடிந்த முடிபாகக் கூறியருளிய சமயம் சைவ சமயமேயாகும். சித்தாந்தம் என்பதற்கு முடிந்த முடிபு என்பதே பொருள்.

கடவுளை அடைய விரும்பிய அறிஞர்கள் பலர் ஒவ்வொரு காலங்களில் மலைகளிலும், காடுகளிலும் தவம் புரிந்து அருளவேட்டுச் சிறு வெளிச்சம் பெற்று, தாங்கள் கண்ட வெளிச்சத்தை உலகிற்கு உபதேசித்தருளினார்கள். இவ்வாறே பிற்காலத்துப் பற்பல சமயங்களும் தோன்றத் தொடங்கின. எல்லாச் சமயங்களுக்கும் காலத்தால் முந்தினதாய், கடவுள் நெறியைப்பற்றிய முடிந்த முடிபாய் விளங்கும் சைவசித்தாந்தத்தை வெளிப்படுத்தியவர் முற்கூறியவர்களைப்போன்ற மனிதர்களுமல்லர், தேவர்களுமல்லர், முழுமுதற் கடவுளாய் இலங்குகின்ற ஏகநாயகனே ஆவார். அம முழுமுதற் கடவுளைச் சைவசித்தாந்தம் சிவன் எனக் கூறுகின்றது அச்சிவன் மக்கள் பொருட்டுத் தட்சிணாமூர்த்தியெனும் குருவடிவம் தாங்கி, சின்முத்திரை ஒன்றினாலேயே சைவநுண்பொருளை முதன் முதல் நந்தி தேவருக்கு உபதேசித்தருளினார். நந்திதேவர் தன் மாணவர் நால்வருக்குரைக்க அந்நால்வருள் சனத்குமாரர் என்பவர் சத்தியஞான தரிசனிகளுக்கும், அவர் பரஞ்சோதி முனிவருக்கும் முறையே உபதேசிக்கலாயினர். பரஞ்சோதி முனிவர் அவ்வுண்மைப் பொருளைத் தமிழ் நாட்டில் பிறந்த தமிழருள் ஒருவராகிய மெய்கண்டாருக்கு சிறுபிராயத்திலேயே உபதேசித்தருளினார். மெய்கண்டார் அருளிச்செய்த தமிழ்நூலே சிவஞானபோதமாகும். சிவம் என்பதற்கு ஒப்பற்ற மெய்ப்பொருளாகிய இறைவன் என்பதுபொருள். ஞானம் என்பதற்கு அவ்விறைவனை அடைதற்குரிய முடிந்த முடிபான அறிவு என்பது பொருள். போதம் என்பதற்கு தெளிதல் என்பது பொருள். ஆகவே சிவஞானபோதம் என்பதற்கு ஒப்பற்ற உண்மைப் பொருளாகிய ஆண்டவனைப்பற்றிய முடிவுகளை ஐயமற அறிந்து தெளிவதற்குரிய நூல் என்பது பொருளாகும். இம்முதல் நூலினைப் பின்பற்றி அருணந்திசிவம் 'சிவஞான சித்தியார்' அருளிச் செய்தார். இருபாஇருபது என்ற நூலும் இவராலேயே இயற்றப்பட்டது. இவர் மாணவர் மறைஞான சம்பந்தர், அவரது மாணவர் மெய்கண்ட சாத்திரங்களில் பதினான்கில் எட்டு நூற்கள் இயற்றியுள்ளார். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்பவற்றை உய்யவந்த தேவரும், உண்மைநெறி விளக்கத்தை தத்துவ நாதரும் உலகிற்கு உதவினார்கள். ஆகவே நமது சாத்திரங்கள் பதினான்காயின. அவற்றை,

"உந்திகளிறு உயிர்போதம் சிந்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்த அருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று."

எனும் இவ் வெண்பாவா லறியலாம்.

மெய்கண்ட சாத்திரங்களைப் போன்றே தோத்திரங்களும் உள; அவற்றைத் திருமுறை என்பர், திருமுறைகள் பன்னிரண்டு. முதல் மூன்று திருமுறை ஞானசம்பந்தர் தேவாரம் 4, 5, 6-ம் திருமுறை நாவுக்கரசர் தேவாரம். 7-ம் திருமுறை சுந்தரர் தேவாரம். 8-ம் திருமுறை மணிவாசகரது திருவாசகமும் திருக்கோவையாரும். 9-ம் திருமுறை திருவிசைப்பா திருப்பலலாண்டு முதலியன. 10 திருமூலர் திருமந்திரம். 11 பட்டினத்தார் போன்ற பெருமக்கள் பாடிய நாற்பதுபகுதிகள். 12 பெரிய

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ௵ ஆவணிமீ ௧௩௨ வெள்ளிக்கிழமை

வெள்ளத்தால் விளைந்த சேதங்கள்

I

இந்த ஆகஸ்ட் மாசத்தின் இரண்டாம் வார அந்தத்திலேமத்திய மாகாணம் முதலாம் இலங்கையின் மலைநாட்டிலே நாட்கணக்கில் அடைத்துப் பெய்த மழை காரணமாக உண்டான வெள்ளப்பெருக்கு, இந்த இலங்கையிலே முன் எக்காலத்தும் நேராத பெரும் அநர்த்தங்களை விளைக்கலாயிற்று சென்ற 1930-ம் ஆண்டில் ஏககாலத்திலே நேர்ந்த பெருங் காற்று, பெருமழை, வெள்ளப் பெருக்கு என்னும் இவைகள்தாமும் இப்பொழுது விளைத்த அநர்த்தம் போன்ற பேரநர்த்தத்தை விளைக்கவில்லையெனலாம். இந்த ஆக்கஸ்ற் மாசம் 15௨ இரவு மத்திய மாகாணத்திலே 36 மணிநேரம் வரையில் விடாமற் பெய்த பெருமழை இலங்கையி லுள்ள பிரதான நதிகளாகிய மகாவலிகங்கை, காலுகங்கை, களனிகங்கை யென்னும் மூன்று நதிகளையும் அவற்றின் கிளையாறுகள் சிலவற்றையும் பெருகச் செய்துவிட்டது; மகாவலிகங்கையும் அதன் கிளைநதிகள் சிலவும் நடுச்சாமத்திலே எல்லை கடந்து பெருகிப் பாயத் தலைப்பட்டமையினால், ஆறுகளின் ஓரங்களிலுள்ள வீடுகள் சிறுகுடில்கள் அவற்றின்கண் வசித்த மக்கள் மாடுகள் ஆடுகள் எருமைகள் முதலானவற்றை அள்ளிச் செல்லலாயின; தென்னையிற் கட்டப்பட்டு நின்ற யானையைத் தென்னையோடு ஆற்றுவெள்ளம் அள்ளிக்கொண்டு சென்றதென்றால் இந்த வெள்ளத்தின் பெருக்கையும் வேகத்தையும் இவ்வள வென்று சொல்லவும் வேண்டுமா!

இந்த வெள்ளப் பெருக்கு நதியோரத்தி லுள்ள பெரு மரங் மரங்களை வேரோடு அகழ்ந்தெடுத்து அள்ளிக்கொண்டு போய், நதிக்கு மேலாக வுள்ள வாராவதிகளின் கண்களுட் புகுத்தி வெள்ளத்தை அவற்றிற் கூடாகப் பாயவொட்டாது தடுக்க, தடைபட்ட வெள்ளத்தோடு மேலும் வந்த வெள்ளமும் பாய்ந்துசேர்ந்து அதிக வலியுடன் இருப்புப் பாலங்களைப் பிடுங்கி வீசிவிட்டது; புகைரத வீதிகளிற் பலவற்றை வெள்ளம் மூடியது; சிலவற்றைச் சிதைத்தது; இப்படியே மக்களும் வண்டிகள் முதலியனவுஞ் சஞ்சரிக்கும் பெருந் தெருக்களும் குறுக்குத் தெருக்களும் வெள்ளத்தினாற் சிதைவுற்றுப் பல அடி ஆழமுள்ள நீருட் கிடக்கலாயின; வெள்ளத்தி லகப்பட்டு வீடுவாசலை யிழந்து உயிர்மாத்திரம் தப்பியமக்கள் பலர் உயரமான பெரு மரங்களில் ஏறிப் பல மணித்தியாலங்களாக மந்தி போற் குந்தியிருந்து விடிந்த பின் ஓலமிட்டபோது பல கஷ்டத்துடன் மீட்கப்பட்டனர்; பல்லாயிரக் கணக்கானோர் மழைக் கொதுங்குவதற்கு இல்லிட மில்லாமல் திகைத்து நிற்கலாயினர். குடிசைகளுள் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள் உடைப் பொருள் பணம் முதலியவற்றை யெல்லாம் அபகரித்துக்கொண்டு போன வெள்ளம் மலைச்சாரலிலும் மற்றை யிடங்களிலு முள்ள வயல்கள் தோட்டங்களி லுள்ள பயிர்களையும் அவைகளி லுள்ள பயன்களையும் சும்மா விடுமென்று காத்திருக்கலாகுமா? எல்லாப் பொருள்களையும் வெள்ளங் கவர்ந்து தன்னுள் மூழ்கச் செய்துவிட்டது.

இந்த அநியாயமான வெள்ளம் இப்படி மக்களுக் குரிய உயிர்களையும் பொருள் பண்டங்களையும் வீடுவாசல்களையும் கதறக் கதறப் பறித்துக்கொண்டு போனதோடு மாத்திரம் திருப்திப் படாமல், புறத்தே, தூரித்த, வெள்ளத்தின்பால் அகப்படாத மக்கள் அவர்களிடம் ஓடிச் சென்று அவர்களுக்கு ஆபத்துக் காலத்திலே உணவை உடையை ஒதுக்கிடத்தைக் கொடுக்காமல், பெரிய பட்டினங்களையும் கிராமங்களையும் சூழ்ந்து ஆழமான வெள்ளத்தினாற் சூழப்பட்ட தீவுகள்போல் ஆக்கி, புகைரதப்பாதை தெருக்களென்னு மிவைகளையுஞ் சேதப்படுத்திவிட்டது; வெள்ளமாகிய பேராபத்திலே அகப்பட்ட கிராமங்கள் பட்டினங்களில் நின்று சங்கடப்படும் மக்களுடன் ஏனைய மக்கள் கடிதப் போக்குவரவு செய்யாமலும், தந்திச் செய்திகளை அனுப்பி அறிய முடியாமலும், தெலிபோன் வாயிலாகப் பேசிக் கொள்ள இயலாமலும் மேலே சொல்லப்பட்ட வழிவகைகளுக்குச் சாதனங்களாக வுள்ள எல்லாவற்றையும் இடையிலே சிதைத்துவிட்டது; இன்னும் இந்த வெள்ளப் பெருக்கு உயிருக்கும் பொருள்களுக்கும் செய்த சிதைவுகளும் அழிவுகளும் பலதிறப்படும்.

---

208 கூப்பன் புத்தகங்கள் வைத்திருந்தார்

கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த பலர் தங்கள் அரிசிக் கூப்பன் புத்தகங்கள் ஒவ்வொன்றையும் ரூபா 10 க்கு ஒரு முதலாளியிடம் அடைவு வைத்திருப்பது பற்றிய விபரம் கொழும்பு நீதிஸ்தலத்தில் தெரிவிக்கப்பட்டது. முகத்துவாரம் ஸெயின்ட் அன்ட்ரூஸ பிளேசைச்சேர்ந்த புலாத் சிங்களகே பாண்டியன் என்ற முதலாளி உத்தரவின்றி 208 அரிசிக் கூப்பன் புஸ்தகம் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரிக்கு 750 ரூபா அபராதமும் அபராதம் செலுத்தத் தவறினால் 6 வாரக் கடுங்காவற் றண்டனை விதிப்பதாகவும் உத்தரவளித்தார்.

உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—28)

"அல்லும் பகலும் இதுதான்கதை"

சிவபாக்கியம் உடனே தன்தாய்க்குச் சமீபமாகச் சென்று "அம்மா, அந்தச் சம்பந்தம் உங்களுக்கும் விருப்பம், எனக்கும் விருப்பம், தங்கை பாக்கியலட்சுமிக்கும் சம்மதமென்றே நினைக்கக்கிடக்கிறது; எங்கள் இருவருக்கும் உடன்பாடென்றால் தன் தாய்க்கும் அது சம்மதமாகவே யிருக்குமென்ற கருத்துப்படத் தங்கை சொல்லுகிறாள்: ஆனமையினால் அம்மா நீங்கள் எங்கள் இராமன் மூலமாகவேனும். இல்லையேல் நேரிலேனும் உங்களுடைய சம்மதத்தை அந்த ஆளுக்குத் தெரிவிக்கலாம்; சம்மதமானால் நீங்கள் அண்ணாவின் இடத்தையடைந்த பின்பு, அவருக்குத் தெரிவித்துக் கருமத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்றாள்; மகள் சொன்னவை அத்தனையும் சரியெனத் தாயும் ஏற்றுக்கொண்டாள்; அடுத்தநாட்காலை இராமனைக் கண்ணகியம்மை சமீபத்திற் கூப்பிட்டு, "எங்கள் சின்னத்தங்கைச்சியைக் கல்யாணஞ் செய்துகொள்ள அந்த வாலிபருக்கு வெகு விருப்பமென்று சொன்னாயே; அது நிசந்தானா..." என்று கேட்பதற்கிடையில் "அம்மா, விருப்பமென்று கேட்கிறீர்களா? நீங்கள் அதற்கு உடன்பட்டால்; அவர் உடனே தாமாக எங்கள் சின்னத்தங்கைச்சிக்கு பெருஞ் சந்மானமுங் கொடுத்துத் தாலி கூறை கொடுத்து, ஏதும் பூணாரங்கள் வேணுமானாலுங் கொடுத்து ஏற்றுக்கொள்ளச்சித்தமாயிருக்கிறார் அம்மா, அல்லும்பகலும் இதைப்பற்றிய கதைதான் என்னுடன் பேசுவார் நான் இவ்வளவுநாளும் உங்களுக்குச் சொல்லப் பயந்துதான் சொல்லாமல் விட்டேன்; ஒருநாள் சின்னத் தங்கைச்சியைக் கண்டாராம்: அன்று தொடக்கம் இந்தப் பெண்ணைக் கண்டவர் எருமைமேய்க்கப் போவரோ என்ற நிலைமையிலேதான் நிற்கிறார் அம்மா" என்று ஆர்வத்துடன் சொன்னான் இராமன். "உனக்கும் இந்தச் சம்பந்தம் உடன்பாடோ, ராமன்" என்று கண்ணகி கேட்க, உங்களெல்லாருக்கும் உடன்பாடென்றால் எனக்கும் அப்படித்தானே" என்றான் ராமன். "நல்லது, நீ இன்று பின்னேரத்திற்கிடையில் அந்த ஆளைக் கண்டு அவருடைய நோக்கத்தை இன்னமும் உசாவி யறிந்துவந்து சொல்லு" எனலும், 'அம்மா, இனி உசாவுவதென்ன? அறிவதென்ன; நானே இப்பொழுது அவருடன் போய்ப் பேசி, அவர் தாமாகவே இதனையிட்டு உங்களுடன் நேரில் வந்து பேசச் செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு இராமன் அவ்விடம் விட்டகன்றான்.

"இல்லையேல் இரண்டாம்பேருக்கும் வெளியிடாதே"

பாக்கியலட்சுமி தனக்குத் தாரமாகக் கிட்டுவாளோ என்ற சந்தனையே சிலநாளாகக் குடிகொண்ட அந்த மனுஷன் அந்தவண்ணமே தனியே இருக்குஞ் சமயம் பார்த்து இராமன் அங்கே போய்ச்சேர்ந்தான்; "ஐயா, என்ன கவலை? எந்தநேரம் பார்த்தாலும் ஏதோ சிந்தித்தபடிதானே காணப்படுகிறீர்கள்; உங்கள் கவலையை எனக்குச் சொல்லவொண்ணாதோ? ஒருவருடைய உள்ளத்திலே ஏதும் பெருங்கவலை யுண்டானால், அக்கவலையைத் தமக்கு நம்பிக்கையான இன்னொருவருக்கு வெளியிட்டால், அக்கவலையாலுண்டான வேதனை அதிகம் குறையுமென்று உங்களைப் போன்ற படித்த மனுஷர், பெரிய மனுஷர் பலமுறையுஞ் சொல்லக் கேட்டிருக்கிறேனே; ஏதுங் கவலையிருந்தால் என்னிடஞ் சொல்லலாமே ஐயா, அதனை ஆற்ற என்னால் ஏதும் முடியுமென்றால் உடனே செய்து வைப்பேன் ஐயா" என்றான் இராமன். கேட்ட மனுஷன் சிறிது சிந்தனை குறைந்தானாய், "இராமன் இந்த நேரத்தில் என் கவலையை உனக்குச் சொல்லாமல் வேறுயாருக்குச் சொல்லுவேன்; என் கவலையின் காரணத்தை உனக்குச் சொல்லுகிறேன்; அதனை நீக்கஉன்னால் ஆகுமேற்செய்; இல்லையேல், இரண்டாம் பேருக்கும் வெளியிடாதே" எனலும், "ஐயா, வீண் பேச்சுப் பேசும் வழக்கம் என்னிடமில்லை: நீங்கள் கூசாமற் சொல்லுங்கள்; கூடுமானாற் செய்கிறேன்; இல்லையேல் இரகசியமாக வைத்துக் கொள்ளுகிறேன்" என்றான் இராமன்; "வேறொன்றுமல்ல, ராமன் உங்கள் ஆச்சியோடு அன்று வந்த அந்த அழகிய பெண்ணை நான் கல்யாணஞ்செய்ய ஆசைப்படுகிறேன்; அதற்கு உங்கள் ஆச்சி உடன்படுவாளோ, அந்தப்பெண் சம்மதிக்குமோ என்ற இவைகளைப்பற்றித்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்" என்று அம்மனுஷன் மெல்லச் சொன்னான்; "ஐயா, எங்கள் ஆச்சி அதற்கு உடன்படக்கூடுமென்றுதான் நினைக்கிறேன்; நான் இந்த விஷயமாக எங்கள் ஆச்சியிடம் ஏதும் கேட்கச் சொன்னால் கேட்கிறேன்; இல்லையேல் ஆச்சியை இங்கே நேரில் வரச் செய்கினும் செய்கிறேன்; எதனைச் செய்யவேண்டும்" என்று இராமன் கேட்க, "நேரில் வரச்செய்தால் நல்லது, ஆனால் வரும்போது நீயும் உடன் வரவேண்டும்" என்று அந்த ஆள் சொல்ல இராமன் ஓம் என்று சொல்லிவிட்டு அவ்விடம் விட்டகன்றான்.

"இந்தநிமிஷமும் ஏற்றுக்கொள்ளச் சித்தம்"

மாலைவேளையாதலும் இராமன் கண்ணகியம்மைக்கு விஷயம் முழுவதையுஞ் சொல்ல, கப்பலின் மேற்றட்டிற்கு அழைத்துவந்து இருக்கச் செய்துவிட்டு அந்த இடத்தில் அந்த மனுஷனையும்போய் இருக்கச்செய்துவிட்டுத் தான் விநயமாக நின்றான்; "என்னுடைய நோக்கங்களை உங்களுக்கு இராமன் சொல்லியிருக்கக் கூடுமென நினைக்கிறேன், ஆச்சி" என்று அந்த மனுஷன் மரியாதையோடு சொல்ல கண்ணகியம்மையும் "ஓம், தம்பி, இராமன் ஒரு அளவிற்கு விபரஞ் சொன்னான்; அதைப்பற்றிக் குறையில்லை, அந்தவிஷயமாக என்ன பேசவேண்டினும் என்னுடன் பேசிக்கொள்ளலாம்; அந்தப் பிள்ளைக்கு நானே தாய்" என்று கண்ணகி சொல்ல, "நீங்கள் பெண்ணுக்கு இஷ்டமானதைக் கொடுக்கலாம்; அது உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது: ஆனால் நான் பெருந் தொகைப்பணம் சந்மானமாகக் கொடுத்து இந்தநிமிஷமும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்" என்று அந்த மனுஷன் சுருக்கமாகச் சொல்லி முடித்தான்.

அப்படி அந்தஆள் சொல்லக்கேட்ட கண்ணகி அகமமகிழ்ந்தாள்; அப்படிச் சொல்லக் கேட்டுக்கொண்டு நின்ற ராமன் சிரித்தபடி "ஐயா கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்கள்; இந்த நிமிஷமும் செய்யச் சம்மதந்தான் எனகறீர்கள்; எங்கள் ஆச்சி ஓம் சொன்னால், உடனே எங்கள் தங்கைச்சியைக் கல்யாணஞ் செய்துகொள்வீர்களா? கல்யாணஞ் செய்வதற்குத் தாலி வேண்டாமா? கூறை வேண்டாமா? மற்றை ஆயத்தங்கள் வேண்டாமா?" என்று வேடிக்கையாகக் கேட்க, "தாலியுண்டு, கூறையுண்டு, இன்னும் ஆகவேண்டிய சிலவுண்டு; தெய்வத்தை வழிபட்டுக் கொண்டு மங்கல்யதாரணஞ் செய்யிற்

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்மமும் சமதர்மமும்

ஸ்ரீ நாவலர் விளக்கம்

"இன்று உலகத்திலே ஓர் நவீன கொள்கை பரவி வருகிறது அதுதான் ருஷியச் சமதர்மக்கொள்கை. சமத்துவம் சகோதரத்துவம், சுதந்திரம் என்ற கோஷங்களுடன் ருஷ்சமதர்மிகள் கிளம்பித் தம் நவீன கொள்கைகளைப் புகுத்திவருகின்றனர். சமதர்மக்கொள்கைகள் பரவுமானுல், 'கர்மம்' என்பதற்கு இடம் இல்லை; அப்படியானுல் சைவத்திற் கூறப்பட்டுள்ள கர்மம் எங்கே போய்விடும் என்று சிலர் கேட்கின்றனர்" என்று சென்ற புதன்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் செய்த ஓர் அரிய சொற்பொழிவில் 'தொண்டன்' பத்திராதிபரும், சைவசித்தாந்த அறிஞருமாகிய நாகர்கோவில் ஸ்ரீ கெ. ஆறுமுக நாவலர் கேட்டார்.

இக்கூட்டம் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின ஆதரவில் நிகழ்த்தப்பட்டது. ஆண்களும் பெண்களுமாகப் பன்னூற்றுக்கணக்கானோர் மண்டபத்திற் செறிந்து இருந்தனர். முடிக்குரிய நியாயவாதியும் ஆங்கில இந்துசாதனப் பத்திராதிபருமாகிய ஸ்ரீ த. முத்துச்சுவாமிப்பிள்ளை அவர்கள் தலைமைவகித்தார்.

தலைவர் தமது முன்னுரையில், இந்த இலங்கையில் அந்நியர் ஆதிக்கம் ஏற்பட்டநாள் தொடக்கம் இற்றைவரை, ஒல்லாந்தர், பறங்கியர், பாதிரிமார் என்பவர்கள் தம்மதத்தைப் பரப்புதற்காகச் செய்துவந்த சூழ்ச்சிகளையும் அக்கிரமங்களையும் எடுத்துரைத்து, இச் சூழ்ச்சிகளையும் அக்கிரமங்களையும் அம்பலப்படுத்தி அவற்றைச் சிதறடித்து சைவத்தை இந்த ஈழநாட்டில் நிலைநாட்டிய பெருமை எங்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானுக்குரியதென்றும், அவர் நாமம்தாங்கி இன்று அன்னார்செய்த அதேபணியை ஆற்றிவரும் சைவசித்தாந்த அறிஞர் நாகர்கோயில் ஸ்ரீ கெ ஆறுமுகநாவலர் அவர்களுக்குச் சைவஉலகம் என்றும் கடமைப்பட்டதென்றும் கூறினர்.

'உயிர்களும் உய்யும் நெறியும்' என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு சொற்பொழிவாற்றிய ஸ்ரீ கெ. ஆறுமுகநாவலர், எவரும இனிதில் விளங்கும்படி, ஆர்வத்துடன் கேட்கும்படி அரியதோர் சொற்பொழிவாற்றினர். சைவசித்தாந்தம் ஒன்றே உலகியல் உயிர்களுக்கெல்லாம் உறுதிபயக்கும் தன்மையது என்றும், அதன்உண்மைகளை இன்று மேனுட்டறிஞர்களும் ஒப்புக்கொண்டு வருகின்றனர் என்றும் அவர்கூறி, உயிர்கள் தாம் தாம் செய்த கர்மத்தின் பயனுக உலகிற்பிறந்து இறந்து ஈற்றில் தலைவன்தாளை யடைகின்றன என்றும், இக்காலத்திலே, ருஷிய சமதர்மவாதிகள் சமத்துவம்பேசி மக்களுக்கிடையே விபரீத கொள்கைகளைப் புகுத்திவருவதைக் குறிப்பிட்டுப் பின்வருமாறு கூறினர்.

"உலகத்துஉயிர்கள் தாம்தாம் இயற்றிய கர்மங்களுக்கேற்ப இவ்வுலகில் நன்மை தீமைகளை அநுபவிக்கின்றன என்று சித்தாந்தம் கூறினுல், சமதர்மிகள் அதனை மறுக்கிறார்கள். கர்மமாவது கத்தரிக்காயாவது; உலகிற் பிறந்த மக்களுக்கிடையே தாரதம்மியம் கிடைக்காது என்று கூறி முதலாளி—தொழிலாளி பேதத்தை அகற்றி, செல்வர் வறியவர் என்ற வித்தியாசத்தைப் போக்கிப் பொருளாதார சமத்துவமும், சமூக சமத்துவமும் ஏற்படுத்த முனைந்து வருகிறார்களே, 'உங்கள் கர்மம் எங்கே ஐயா போய் விட்டது' என்று கேட்கிறார்கள். ஓர் நாட்டின் செல்வத்தைப் பகிர்ந்து கொடுக்கலாம், பொருளாதார நிலையிற் சமத்துவம் ஏற்படுத்தலாம்; ஆனுல் இவற்றின் பயனுக உண்மையான சமத்துவம் உலகிலே ஏற்பட்டுவிடுமா? உலகிலே ஒருவன் குருடனுகப் பிறக்கிறான்; இன்னொருவன் கூனனுகப் பிறக்கிறான்; இன்னொருவன் ஆனுக செல்வத்தாம்பையா கடற்குழவானுளும செல்வமும் மண்ணைசுக்கும் உரிமைக்காரனுகவந்தும் அவற்றையநுபவிக்க முடியாது நித்திய நோயாளியாக இருக்கிறான். இன்னொருவன் பிறவித்தரித்திரனுகவிருந்தும் போழுதும் தேகாரோக்கியமும் உடையவனுக இருக்கின்றான். இந்தக் குறைகளையெல்லாம் ருஷியச் சமதர்மிகள் போக்கி எல்லாரையும் ஒரே நிலையில் ஏன் வைக்கவில்லை? பொருளாதார சமத்துவம் ஏற்பட்டபோதிலும் மற்றும் எத்தனையோ விஷயங்களில் ஏன் சமத்துவம் ஏற்படவில்லை? அதற்குக் காரணம் என்ன? இந்த இடத்தில்தான் சைவ சித்தாந்தம் விடை பகர்கின்றது. பிராருத்துவ கன்மத்தின் பயனுகவே உண்மையான சமத்துவம் ஏற்படவில்லை என்று சித்தாந்தம் கூறுவதன் உண்மையை நாம் சமதர்மக் கொள்கைகள் பரவியுள்ள இக்காலத்திற் காண்கிறோம்."

மேலும் பிரசாரகர் சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலாம் பொக்கிஷங்களில் உள்ள அரும் பெரும் கருத்துக்களை அழகாக எடுத்து விளக்கினர்.

இந்துசாதன ஆசிரியர் திரு. ம வே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்கள் நன்றி கூறத் தலைவர் குறிப்புரையுடன் கூட்டம் முடிவெய்தியது.

பாகிஸ்தானில் மதுவிலக்கு

முஸ்லிம்கள் லாகிரி வஸ்துக்களில் வியாபாரம் செய்வது இஸலாம் மதத்திற்கு விரோதமானசெயல் என்று காரணம் காட்டி பாகிஸ்தான் மந்திரி காஜி பஸ—ல்லா முஸ்லிம் வியாபாரிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த சாராயக்கடை குத்தகை அநுமதகளை யெல்லாம் நீக்கப்போவதாக அறிவித்திருக்கிறார். சிந்து அரசாங்கத்தாரின் மதுவிலக்குக் கொள்கைப்படி இவ்வித நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதென ஷை மந்திரி பத்திரிகா நிருபருக்குத் தெரிவித்தார்.

சிந்துவில் பூரண மதுவிலக்கை அமுல் செய்ய விரும்புவதால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சீமைச் சாராயக் கடைகள் முதலிய எல்லா லாகிரி வஸ்துக்கள் விற்பனை செய்யும் கடைகளும் மூடப்படும் அத்துடன் 25 வயதுக்குட்பட்டவர்கள் சாராயக்கடைப் பக்கமே செல்லாதபடி தடுக்கப்படுவார்கள்

சுதந்திரதினக் கொண்டாட்டம்

எங்கள் தாய்த்தேசமாம் பாரதநாட்டின் சுதந்திர தினம் காரைநகரில் 15 8-47 வெள்ளிக்கிழமை வெகு குதூகலமாகக் கொண்டாடப்பட்டது. அன்று ஆலயங்களில் விசேஷ ஆராதனைகள் நடைபெற்றன. பிற்பகல் மகாத்மா காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு முதலிய இந்தியத் தலைவர்களின் படங்கள் நன்கு அலங்கரிக்கப்பட்டு மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக சைவமகாசபை மண்டபத்தை யடைந்தது. திரு. பொ. நவரத்தினம் அவர்கள் கொடி வணக்கம் நடத்தியபின் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

அதன்பின்னர் நியாயதுரந்தரர் திரு. ஐ. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் பகிரங்கக் கூட்டம் ஆரம்பமாயது. அவ்வமயம் பலர் இந்தியத் தலைவர்களின் தேசபக்தியையும், அவர்கள் தொண்டின் பெருமைகளைப்பற்றியும், அத்தொண்டின் உயரிய கொள்கைகளால், அவர்கள் அடைந்துள்ள நன்மைகளைப்பற்றியும் விரித்துக் கூறினர். ஈற்றில் வந்தனோபசாரங் கூறியதும் இரவு 9 மணியளவில் கொண்டாட்டம் இனிது நிறைவேறிற்று.

தேர்தல்முடிவுகள்

மிஸ்ரர் பண்டாரநாயக்கா வெற்றி

சென்ற திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் நிகழ்ந்த தேர்தல் விபரம் வருமாறு:

வத்தகமையில் டிஸ்ரர் ஏ. ரதிநாயக்கா என்னும் ஐக்கியதேசியக் கட்சி அபேட்சகர் தமக்கெதிராகநின்ற சுயேச்சைவாதி ஒருவரை 1',3'1 வாக்குகளால் வென்றார் மிஸ்ரர் ரதிநாயக்கா முந்திய அரசாங்கசபையில் தும்பாரைப்பகுதிப் பிரதிநிதியாயிருந்தவர்.

டெஹியோவத்தை

இங்கே மிஸ்ரர் றெஜிடெரீரா என்னும் சமசமாஜக்கட்சி அங்கத்தவர், இரண்டு ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர்களையும் இரண்டு சுயேச்சை வாதிகளையும் 38,9 வாக்குக்களால் வெற்றி பெற்றார் இத்தொகுதியில் இரண்டு ஐ. தே. க. அபேட்சகரும் இன்னோர் சுயேச்சை வாதியும் தம் கட்டுப்பணத்தை இழந்தனர்,

வெலிகம

மிஸ்ரர் மொன்ரேகுஜெயவிக்கிரம என்னும் ஐ. தே, க. அபேட்சகர் தமக்கெதிராக நின்ற நால்வரை 3787வாக்குக்களால் வெற்றிகொண்டார். இருவர் இத்தொகுதித் தேர்தலில் தம் கட்டுப்பணத்தைஇழந்தனர்.

சாவகச்சேரி

சாவகச்சேரித் தேர்தலில் ஸ்ரீ வி. குமாரசுவாமி என்னும் தமிழ்க்காங்கிரஸ் வாதி ஸ்ரீ வி ஆர் தம்பையா என்னும் ஐ. தே கட்சியினரை 9811 வாக்குக்களால் வெற்றிகொண்டார். விபரம் வருமாறு:

ஸ்ரீ வி குமாரசுவாமி 11813 வாக்கு
ஸ்ரீ வீ ஆர் தம்பையா 2002 வாக்கு

அத்தனகலை

அத்தனகலையில் ஸ்தல ஸ்தாபன மந்திரியும் ஐக்கியதேசியக் கட்சி உபதலைவருமான மிஸ்ரர் எஸ். டபிள்யூ. ஆர் பண்டாரநாயக்கா தமக்கெதிராக நின்ற சமசமாஜக்கட்சி அங்கத்தவர் மிஸ்ரர் சந்திரபால குணவர்த்தன என்பவரை 26,8?4 வாக்குக்களால் முறியடித்தார்.

இலங்கையின் அரசியல் மன்றத் தேர்தல்களில், இதுவரை எவராவது இவ்வளவு பெருந் தொகையான வாக்குகளால் வெற்றிபெறவில்லை யென்று சொல்லப்படுகிறது.

அவிசாவலை

அவிசாவலையில் மிஸ்ரர் பிலிப் குணவர்த்தன என்னும் சமசமாஜக்கட்சிப் பிரமுகர் தமக்கெதிராக நின்ற ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகரை வெற்றி கொண்டார்.

ஏனைய தேர்தல் முடிவுகளை 5-ம் பக்கத்திற் பார்க்கவும்.

உயிர் தப்பினர்

கிழக்குப் பாஞ்சாலத்திலே வகுப்புக் கலவரத்தினுல் பாதிக்கப்பட்ட இடங்களை இந்திய இராணுவ மந்திரியான சர்தார் பல்தேவ்சிங பார்வையிட்டார். சென்ற திங்கட்கிழமை அப்படி அவர் பார்வையிட்டுச் சென்றபோது, அவரையும் அவர் கோஷ்டியாரையும் கலகக்காரர் என்று சந்தேகித்து அங்கே நின்ற பொலிசார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். சர்தார் பல்தேவ் சிங்கும் அவரது ஆட்களும் தரையில் அப்படியே வீழ்ந்து படுத்துத் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொண்டனர். நல்லவேளையாக சர்தார் பல்தேவ் சிங் உயிர்தப்பினர் அவர் அன்று பின்னேரம் புதுடெல்கிக்குத் திரும்பினர்.

தென் ஆபிரிக்கப் பிரச்சினை

தென்ஆபிரிக்காவில் இந்தியர்க்குவிரோதமாக அத்தேச அரசாங்கம் எடுத்த நடைவடிக்கைகள்பற்றி, இந்தியாவும் தென்னுபிரிக்காவும் செப்டெம்பர் மாதத்துக்கு முன் ஓர்ஒழுங்குக்கு வரவேண்டும் என்று ஐக்கியதேச ஸதாபனம் சென்ற ஆண்டில் தீர்மானித்தது. ஆனுல் தென்னுபிரிக்கா இதுவரை இவ்விஷயமாகச் சமரசம் பேச மறுத்துவிட்டது அடுத்தமாதம் இப்பிரச்சினை மீண்டும் ஐக்கியதேச ஸ்தாபனத்தில் எடுத்தாளப்படும். இந்தியாவின் கட்சியை எடுத்துரைக்க ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிதர் சேர் மிர்ஸா இஸ்மெயில் குதவியோர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சைவப் பிரசங்கம்

நேற்றைத்தினத்தும் (28-8-47) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில், திரு. சி. நாகையா ஆசிரியர் அவைத்தலைவராயிருப்ப, யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதரவில், 'தொண்டன்' பத்திரிகை யாசிரியராகிய சைவப்பிரசாரகர் திரு. கெ. ஆறுமுக நாவலரவர்கள் "முருகப்பெருமான் "அவதார உண்மை" என்னும் விஷயமாகச் சிறந்த பிரசங்கஞ் செய்தார்கள்; மேற்படி நாவலரவர்கள் செய்யும் பிரசங்கங்கள் இந்த இலங்கையிலும் விசேஷமாக யாழ்ப்பாணத்திலும் சைவநன்மக்களாற் பெரிதும் போற்றப்படுவன என்ற குறிப்பு முந்தியே இப்பத்திரிகையில் வெளிவந்துளது; சென்ற இரவு நாவலரவர்கள் பிரசங்கத்தைக் கேட்டு உய்தியடையும் வண்ணம் பன்னூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களுமாகிய அபிமானிகள் சமுகஞ் செய்தனர்; மூன்றுமணிநேரம் பிரசங்கம் இடையீடின்றி நடைபெற்றது; அன்பர்களெல்லாரும் உள்ளமுருக, முருகபத்திகளாத் தம்மை மறந்து பிரசங்கத்தைக் கேட்குந்தோறும் ஆநந்தமுற்ற வண்ணம் இருந்தார்கள்; பிரசாரகர் ஏனைய பல நூற்களோடு கந்தபுராணத்துள்ள திருவிருத்தங்களுட் பலவற்றையே விசேஷமாக எடுத்துக் காட்டி முருகப்பெருமான் கொண்ட திருஅவதாரத்தின் உண்மை நுட்பத்தை இலகுவான அழகிய முறையில் விளக்கினர்; இக்காலத்திலே இந்நாவலர் போன்ற பெரியார்பிரசங்கம் இங்குள்ள சைவமக்களுக்கு இன்றியமையாததென்பதை இரண்டாமுறையுங் கூறுகின்றேம்

இந்திய அரசியல் நிர்ணய சபை

இந்திய அரசியல் நிர்ணயசபை சென்ற திங்கட்கிழமை கூடியபோது டக்ரர் ராஜேந்திரப் பிரசாத் பின்வருமாறு தெரிவித்தார்:—இந்தக் கூட்டத்தை ஆகஸ்டு மாதம் 31 ந் திகதியோடு முடித்துவிடவேண்டும். ஐக்கிய அதிகார சபையின் அறிக்கையை இரு தினங்களில் விவாதித்து முடிக்கவேண்டும். சிறுபான்மையோர் மூலாதார உரிமைச்சபை அறிக்கையை அடுத்த இரண்டு தினங்களில் விவாதித்து முடித்து விடவேண்டும். கடைசிநாளில் இந்திய அரசியல் திட்டத்தை இதுவரை வகுத்துக்கொண்டிருந்த அரசியல் நிர்ணயச் சபை இந்திய டொமினியன் சட்டசபையாக மாறுவதைக் குறித்து ஆலோசித்து முடிவு செய்யவேண்டும்.

அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஐக்கிய அதிகாரசபை அறிக்கை சம்பதமாக இந்திய அரசாங்கத்துக்குள்ள அதிகாரங்களைப்பற்றிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டன.

சில இடங்களில் வகுப்புக் கலகத்தில் துயருறும் ஜனங்களுக்கு அநுதாபம் தெரிவிக்கு முகத்தான் சபை ஒருநிமிஷம் மௌனம் அநுட்டித்தது.

முஸ்லிம்களின் ஓலம்

கிழக்குப் பாஞ்சாலத்திலே முஸ்லிம்கள் சீக்கியராலும் ஹிந்துக்களாலும் கொன்று குவிக்கப்படுகின்றனர் என்றும் இதனை உடனே அடக்கவேண்டுமென்றும் லண்டனில் உள்ள முஸ்லிம்லீக் சங்கம் பண்டிதர் நேருவுக்கு ஓர் தந்திச்செய்தி அனுப்பியிருக்கிறது. பாஞ்சாலத்துக்கலகம் இன்னும் பூரணமாக அடங்கவில்லை, ஆனுல் வங்காளத்திலேமுன்னொருபோதுமில்லாத வகுப்புச் சமாதானமும் அமைதியும் நிலவுகின்றது.

வியாபாரத்திற் கழகு
விளம்பரஞ் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சி ரேடியோ

சனி ஆகஸ்ட் 30

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 சரோசினி ஜகந்நாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 எம் பத்மநாபன் வயலின் 8.30 சித்திர கானம் இசைத்தட்டு 9 முடிவு

1 எம் பத்மநாபன் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2-05 சர்வகலாசாலைக் குறிப்பு 2-15 சரோஜினி ஜகந்நாதன் பாட்டு 2-45 முடிவு.

காலை 5 திருவெண்காடு டி பி எஸ் செல்வரத்தினம் பாட்டு 5.40 பெரிய புராண விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருவெண்காடு டி பி எஸ் செல்வரத்தினம் பாட்டு 7-15 இராணுவத்திலிருந்து திரும்பியவர்களுக்கு 7-30 தமிழில் செய்திகள் 7-45 ஏமனி சங்கர சாஸ்திரி வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வர்ணக் கயிறு தொடர்கதை 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9-45 எச் எஸ் மதிவாச்சார் கோட்டுவாத்யம் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

ஞாயிறு ஆகஸ்ட் 31

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் கே வெங்கடரமணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாத்ய இசை இசைத்தட்டு 8-30 டி ஏ ஞானம்பாள் வீணை 9 முடிவு

12 கதம்பம் இசைத்தட்டு 12-30 முகப்புச் சித்திரம் 12-35 திவ்விய தரிசனம் நாடகம் 12-45 கிடைக்காத கடிதங்கள் ஆசிரியருக்கு 12 55 சிம்மந்தநம் 1 மணி மலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 காஞ்சீபுரம் ஜி சாரங்கபாணி செட்டியார் ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு

மாலை 5 எஸ் கே வெங்கடரமணன் பாட்டு 5 40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி ஏ ஞானம்பாள் வீணை 7 30 தமிழில் செய்திகள் 7-45 திரைப்பட விமர்சனம் 8 மாயவரம் எஸ் ராஜம் ஐயர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 டி எஸ் மரியானந்தம் பாட்டு 10 இசைவேளை 10—30 முடிவு.

தேகவியோகம்

பார்ப்பதியம்மை

சென்ற திங்கட்கிழமை (25 8-47) வேலணை திரு. முருகேசு அவர்களின் மனைவியாரும், யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக் காரியதரிசியும் இந்துக்கல்லூரி ஆசிரியருளொருவருமாகிய திரு. மு. மயில்வாகனமவர்களின் தாயாருமாகிய ஸ்ரீமதி பார்ப்பதியம்மையார், தம்மைச் சிலநாட்களாகப் பீடித்து வருத்திய நோய்காரணமாக, தமது கணவன், மக்கள், பேரப்பிள்ளைகள், இன சனத்தினர், அயலார் வருந்த தமது இல்லத்திற்றானே இவ்வுலகவாழ்வை யொருவினர். இவருடைய ஈமக்கிரியைகள் அடுத்தநாள் விதிப்படி பல சுற்றமித்திரர் சமுகத்திற் செய்யப்பட்டன; இவர் பெற்ற மக்கள் ஆண்கள் மூவர், பெண்கள் நால்வராவர். இந்த அம்மையார் இல்லறமாண்பு, ஈசுரபக்தி, விருந்தோம்புதல், சைவ ஆசார வொழுக்கம், ஈகை முதலிய சுகுணங்களோடும் நற்செயல்களோடுங் கூடியவரென அறியலானேம். இவ்வம்மையாருடைய ஆன்மா சாந்தியடைக.

ஹிந்தி—உருது

இந்த இரண்டு மொழிகளையும் தமிழ் மொழி மூலமாகவேனும், மலையாளப் பாஷை மூலமாகவேனும் இலகுவிற் பயிலுதலாகும்,

விரும்பினோர் விபரங்களுக்குப் பின்வரும் விலாசத்திற்கு எழுதி அறிந்துகொள்ளலாகும்.

அற்லஸ் ஹால்
தபாற்பெட்டி இலக்கம் 649
கொழும்பு

Std. 18. 29-8-47

சிவநாமங்களின் மெய்ப்பொருள்

தற்பரன், அதீதன், பூரணன், அமலன், நித்தியன், ஏகன் என்னும் பெயர்கள் சிவபிரானுக்கே உரியவை. (1) அரவணிந்தோன், 2) அழலாடி (3) கங்காளன் (4) கபாலி (5) சுடலையாடி (6) நக்கன் (7) நந்தி (8) நீறணிந்தோன் (9) பித்தன் 10) பேயொடாடி என்னும் பெயர்களும் சிவபிரான் பதிலட்சண முள்ளவரென்றே காட்டுகின்றன.

(1) அரவமானது குண்டலிசக்தி யென்றும், அது சிவபிரானுடைய பரிக்கிரக மாயாசத்தி யென்றும், அந்தச் சத்தியே இவ்வாறு உருவகஞ்செய்யப்பட்டதென்றும் கூறுப. இதனால் சிவபிரானுக்கு அரவணிந்தோன் என்னும் பெயர் போந்தது

(2) தன்னுடையதல்லாத புவன போகங்களைத் தன்னுடையதென்று மதிக்கின்ற புறப்பற்றையும் தான் அல்லாத அந்தக் கரணங்களைத் தான் என மதிக்கின்ற உட்பற்றையும் ஞானாக்கினியினாலே சுட்டொழித்து நின்ற ஞானச்சுடரைப் பரவெளியின்கண்ணே விளங்குவாராம் நமது தற்பரனெனப்படும் ஆன்மநாயகரென்பதை உணர்த்தும்பொருட்டே அவர் சுடலையாடி எனப்பட்டார்.

(3) பிணங்கள் சுடப்படும் காட்டிலே கபாலமும் கங்காளமும் நீறும் பேயும் அழலும் உளவாமாதலினாலே பற்றுக்களறுக்கப்பட்ட ஞானச் சுடலையில் விளங்குவார் என்பதை தூலாருந்ததீ நியாயம்பற்றிச் சூசித்தற்கே, அவர் அழலாடி யென்றும் கங்காளனென்றும், (4) கபாலி என்றும், (8) நீறணிந்தோனென்றும், (10) பேயோடாடி என்றும் சொல்லப்படுவார். இந்த ஞானச்சுடலையை உணர்த்துமாறே அவர் கங்காளம் முதலிய குறிகளை யுடையாரென்றும் பேசப்படுவர். நிருவாணி என்பது நிருவாணம் என்னும் பதத்திலிருந்து பிறந்தமையாலும், நிருவாணமென்பது மோக்ஷமெனப் பொருள்படுகின்றமையாலும் நக்கனென்பதும் நிருவாணியெனப்பொருள்பட்டு மோக்ஷமுடையாரென்றும் மோக்ஷம் கொடுப்பவரென்றும் பொருள்படுவதினாலும் சிவன் நக்கனெனப்படுவார். (மோக்ஷம் = முத்தி = வீடு புறப்பற்றுக்கள் அகப்பற்றுக்களை அறுத்தல்) தத்துவக்கலைகளை யொழித்தல் முத்தியாய் முடிதலினாலே நக்கனெனப்பட்டார் என்று சொல்லுதலுமொன்று.

பெத்தமுத்தி தசைகளிலே ஆன்மாக்களுக்கு இன்பத்தைக் கொடுப்பவராதலினாலே நந்தி எனப்படுவார். பித்தம் அக்கினிக்குப் பெயராதலினாலும் அக்கினி சொரூபர் சிவபிரானே ஆதலினாலும் அவர் பித்தனெனப்படுவார். உயிர்கள்மாட்டு அன்பினையுடையராதலினால் பித்தனெனப்படுவாரென்பதும் ஒன்று,

[செந்திநாதையர் எழுதிய சிறு சுவடி யொன்றிலிருந்து எடுத்தது]

சைவ பரிபாலன சபை 59 வது வருடாந்தக் கூட்டம்

நிகழும் சர்வசித்து ௵ புரட்டாசி மீ 5 ௨ (21.9-47) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் சபையங்கத்தவர்களாயுள்ளவர்கள் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றித் தனாதிகாரியிடம் செலுத்தவேண்டும். சந்தாப்பணம் நிலுவையுள்ளவர்கள் கூட்டத்தில் வாக்குரிமைக்கு அருகரல்லர்.

மு. மயில்வாகனம்
காரியதரிசி
சைவபரிபாலனசபை

11—8—47
யாழ்ப்பாணம்.

Mis 115 19.8-47—29-9-47

பிரதிஷ்டை முதலிய செய்யத்தகாக் காலம்

ஆசாரியர்கள் பிரதிஷ்டை மகோத்ஸ்வம் முதலிய கிரியைகளைச் செய்யத்தகாதகாலங்களான: பிதாமாதாமரிக்க அவர்கட்குப் பிரேதக்கிரிகை செய்து. மாசம்தோறும் மாசிகங்கள் செய்து ஒருவருடமாகி ஆப்திசச்சிராத்தம் முடியும்வரையும், தமது மனைவி கருப்பவதியாயிருக்கும் காலங்களிலும், ஆசாரியாபிடேகம் செய்வித்தநாள்முதல் மூன்று பக்ஷம்வரையும், விவாகம் செய்தநாள் முதல் மூன்று பக்ஷம்வரையும், தமதுமனைவி பிரசவித்த நாள்முதல் மூன்றுபக்ஷம் வரையும் இவ்வாறாகிய காலங்களில், மகோத்ஸ்வம் பிரதிட்டை முதலிய கிரியைகளைச் செய்யக்கூடாதென்றும் இதை மீறிச் செய்பவர்கள் பிர்மகத்தி தோஷத்தை அடைவார்களென்று காரணாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. இதுவன்றியும் 11 ஆலயங்களில் பிரதிட்டை நடந்த மறுநாள் முதல், மூன்று பக்ஷம், அல்லது இரண்டுபக்ஷம் அல்லது ஒரு பக்ஷத்துக்காவது, தினம்தோறும், ஸ்நபநம சாந்தி ஓமம், பிரசன்ன பூசை, மதலிய உபசாரங்களைச் செய்ய வேணுமென்று காரணாகமம் சகச்சிராகமம் முதலிய மூலாகமங்கள் கூறுகின்றன. இவைகளை யுணராது பன்னிரண்டாம் நாள் இருபத்திரண்டாம் நாட்களில் மண்டலாபிடேகத்தைச் செய்தும் செய்வித்தும் வரும், குருமூர்த்திகளும் கோவிற்றருமகர்த்தாக்களும் இதனைச் சற்றே ஊன்றிச்சிந்திப்பார்களாக. இன்னும் ஆசாரியர்களுக்கு சிலநியதிகளுண்டு. அதாவது, பிரதிட்டை மகோத்ஸவங்கட்கு இரட்சாபந்தனம் தரித்திருக்கும்காலங்களில எண்ணெய்தேய்த்து ஸ்நானம் செய்தல், நிலத்திற் சயனித்தல், பிறருடைய அன்னத்தைப் புசித்தல், ஸ்திரீ சங்கமம் முதலிய இவைகளை நீக்கி, ஒருவேளைப் போசனத்துடன் இருந்து அக்கருமத்தை நிறைவேற்றவேண்டும் என்று அகோர சிவாசாரியரியற்றிய மகோத்ஸவ விதியிற் கூறப்பட்டிருக்கின்றது.

ஆனால் இல்விதிகட்கு மாறாக நடப்பவர்கள் இதனைச் சற்றே சிந்தித்தல் வேண்டும்.

தேவை

சிவன் ஐக்கிய பண்டகசாலைக்குத் தகுதி வாய்ந்த ஓர் மனேச்சர் தேவை. சங்கப் பிரமாணங்களுக்கமைய நடக்கவேண்டும்.

தொடக்கத்தில் மாதச் சம்பளம் ரூபா 55 கொடுக்கப்படும். பிணைப்பணம் ரூபா 450 கட்டவேண்டும். விரும்புவோர் காரியதரிசி அவர்களுக்கு 30-8-47 க்கு முன் விண்ணப்பஞ் செய்யவும்.

சிவன்கோவிலடி
வட்டுக்கோட்டை
29-7-47

இங்ஙனம்
ந நடேசர்
காரிய ரிசி.

M 101 1-8.47 — 29-8-47

காந்திஜீக்கு லீக் புகழ்மாலை

இந்திய அரசியல் நிர்ணய சபையிலுள்ள முஸ்லிம்லீக் கட்சி ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது:—

கல்கத்தாவில் உள்ள ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தி அமைதியை நிலைநாட்டும் விஷயத்தில் மகாத்மா காந்தி செய்துள்ள சேவையை லீக் கட்சி பாராட்டுகிறது. அவருடைய சேவையினால் நூற்றுக்கணக்கானவர்கள் உயிர் பிழைத்தனர். சொத்துக்கள் நாசமாகாமல் தப்பின.

அமைதியை நிலைநாட்டுவதற்காக சலியாமல் உழைத்ததன் மூலமாக தம்முடைய பரந்த நோக்கத்தையும் தீர்க்க தரிசனத்தையும் அவர் எடுத்துக்காட்டி விட்டார்

தந்தரோக சஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்
சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும் முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
டெக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30.6.48 (வெ)

கடிதர்க்கு விஞ்ஞாபனம்

இப்பத்திரிகைக்குக் கடிதங்களையும் ஏதும் சமாசாரங்களையும் எழுதி யுதவும் அபிமானிகள், சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்ற முறையை இயன்றவரையில் அநுசரித்து, தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதியனுப்புதல் வேண்டும். அபிமானிகள் எழுதியனுப்பும் கடிதங்களைத் தொகுக்கவும் திருத்தவும் மிகையானவற்றைத் தவிர்க்கவும், தகாதனவெனக் கண்டவற்றை ஒதுக்கவும் பத்திரிகாசிரியர்களுக்கு அதிகாரமுண்டென்பதையும், இப்பத்திரிகையை ஆதரியாதவர்கள் வெளியிடும்படி எழுதியனுப்பும் கடிதங்கள் இடம்பெறாவென்பதையும் அன்பர்கட்குத் தெரிவிக்கின்றேம்.

—பத்திராசிரியர்.

௨

குகமயம்

முல்லைத்தீவு, குமாரபுரம்

ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்
திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தொன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர், சைவாபிமானிகள் காலந்தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக்கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இ பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம், மகாமண்டபத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்குக் கதவுகள் அமைத்தல், இரண்டுமண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமன் கொங்கிறிற் இடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டி யிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"போர்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்"

இங்ஙனம்,
குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,
கு. பரமசாமிக் குருக்கள்.

Std 26—1.7-47 30-9-47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

செய்யலாய்" என்று வேடிக்கையாகவே அந்த மனுஷன் சொன்னான்; "தெய்வத்திற்குச் சித்தமானால் அப்படியுந் செய்பலாந்தான்; ஆனால, நாம் இப்பொழுது அவசரப்படுகிறயமில்லியே; செய்வதென்றாலும் எங்களுடைய மகனிடஞ் சென்றபிறகு. அந்த வீட்டிலே வைத்துச் சிறப்பாகச் செய்யலாந்தானே" என்று கண்ணகியம்மை சொன்னாள்; அப்படிச் சொல்லக்கேட்ட அந்த மனுஷன் அதற்கு ஏதும் பதில் சொல்லாது சும்மாவிருந்துவிட்டு, தன்னிடத்திலுள்ள நிலப்புலம் பொருள் பண்டமாடுகள் பெருந்தொகைப் பணம் முதலியவைகளெல்லாம் தான் விவாகஞ் செய்யும் பெண்ணிடத்திலேயே ஒப்புவித்துவிடச் சித்தமாக விருக்கிறேனென்ற கருத்துப்படக் கண்ணகியம்மைக்குச் சொன்னான்; அப்பொழுது இராமன அந்த மனுஷனைப் பார்த்து, "ஐயா, இவைகளெல்லாவற்றையும் ஒப்புவித்துவிட்டு உங்களையும் அந்தப்பெண்ணிடமே ஒப்புவித்தால் ஒரு சங்கடமுமில்லை என நினைக்கிறேன்" எனறுசொல்லி மெல்லச் சிரித்தான்: "தம்பீ, எனக்கும் சம்மதம், எக்குடியிற் பகுந்தாலும் எங்கள் பெண் சீராய்ச் சிறப்பாய்ப் போய்ப் புகழாயிருக்கவேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை; ஆண்டவன் கிருபையால் உமக்கு அவள் தாரமானால் நல்லாயிருப்பாளென்றுதான் என்மனம் எண்ணுகிறது; பெண்ணுக்கும் இது சம்மதம் என்றுதான் எண்ணுகிறேன்; எனமகனும் விஷயத்தையறிந்தால் விருப்பப்படுவான்; எல்லாம் ஆண்டவனுடைய அருள்தான்" என்று சொல்லிவிட்டுக் கண்ணகியம்மை அந்த இடத்தைவிட்டகன்று தன் மக்களிருக்குமிடத்திற்குப் போனாள்; இராமன்மாத்திரம்அங்கேகின்றான.

"ஆபத்திற்குப் பாவமில்லை"

கண்ணகியம்மை தான் அந்த ஆளுடன் பேசிய விஷயத்தையும், பாக்கியலட்சுமியைக் கல்யாணஞ்செய்வதற்கு அந்த ஆளுக்குப் பூரணசம்மதமென்பதையும், விவாகத்தைக் கூடிய விரைவிலே செய்வதுதான அவருக்குப் பிரியமென்பதையும் தன் மக்களிருவருக்குஞ் சொல்லிக் கொண்டிருக்கும் போது, ஒரு சிறிய அழகிய 'சூற்கேஸ்" என்று இக்காலத்திலே சொல்லப்படும் பெட்டியை இராமன் கொண்டுவந்து பாக்கியலட்சுமியின் முன்னிலையில் வைத்து. "இந்தப் பெட்டியை அந்த ஐயா எங்கள் ஆச்சியின் சமுகத்திலே பெண்ணிடங் கொடுக்கும்படி தந்தார்" என்று சந்தோஷத்தோடு சொன்னான்.பெட்டியைத் தன் முன்னிலையில் இராமன இப்படிச் சொல்லி வைத்தமாத்திரத்தே இருந்த பாக்கியலட்சுமி சரேலென எழுந்து ஒருபுறத்தே ஒதுங்கி நாணமுமீதூரக் கப்பலின் அடித்தட்டைப் பார்த்தவண்ணம் நின்றாள்; அதனை அவதானித்த சிவபாக்கியம தங்கள் தாயைப் பார்த்து, "அனுப்பிய பெருளை அன்புடன் ஏற்கத்தானே வேண்டும்; நீங்கள் எடுத்துத் திறந்து பார்த்துத் தங்கைச்சியிடங் கொடுக்கலாமே" என்று சொல்வதறகிடையில் இராமன், திறப்பையும் என்னிடந்தந்திருக்கிறார் என்று மடியிலிருந்து திறப்பை யெடுத்தான்: அப்போது கண்ணகியம்மை கண்கலங்க மகளைப் பார்த்து. 'மகளே, நான் அமங்கலை; பெண்ணுக்கென முதன்முதல் அனுப்பிய மங்கலப்பொருளை நான் ஏற்று வழங்குவது முறையல்ல; இராமனிடம் திறப்பை நீயே வாங்கித் திறந்து உன் தங்கையிடம் சந்தோஷமாகக் கொடடி கண்ணே" என்று தன் கவலையை மாற்றி முகமலர்ச்சியுடன் சொல்லுதலும், 'அம்மா, நான் என்ன முறையில் எடுத்துக் கொடுப்பது?" என்று மகள்கேட்க, "மகளே ஆபத்திற்குப் பாவமில்லை யென்று சொல்லுவார்கள்: நீதான் பாக்கியலட்சுமிக்குத் தமக்கை; இந்த நேத்திலே உன் தங்கைக்கு நீதான் தாயென்று உன்னைப் பாவித்துக்கொண்டு பெட்டியைத் திறந்து அதனுள்ளேயிருக்கும் பொருள்களை எடுத்து உன் தங்கையிடங் கொடு" என்று தாய் சொல்ல, சிவபாக்கியம் தாய் சொல்லைத் தட்டாது அப்படியே திறப்பை இராமனிடம் வாங்கிப் பெட்டியைத் திறந்தாள்.

"புற்றரை பாம்பாட்டுதல் புத்தியல்ல"

திறந்து பார்த்தபோது, வெள்ளியுருக்கப்பட்டுச் செய்யிரண்டு, இரவிக்கைக்காகிய பட்டுத் துணிகளிரண்டு, அந்தப் பெட்டியுள் வைக்கப்பட்ட ஒரு சிறு பெட்டியுள் "அமெரிக்கன் டொலர்" எனப்படும் பவுண் நாணயங்கள் பத்து, இக்காலத்திற்கேற்ற நவமான முறையிற் செய்யப்பட்ட கல்லிழைத்த மோதிரங்கள் மூன்று வைத்திருப்பக்காணப்பட்டன: இவைகளெல்லாம் சிவபாக்கியம் ஒவ்வொன்றாக இருந்தபடி எடுத்துக் கொடுப்ப, பாக்கியலட்சுமி தலைகுனிந்தபடி கூசிக்கூசி அவைகளை வாங்கித் தன் பயணப் பெட்டியின்மேல் வைப்பாளாயினள்; கண்ணகியம்மை உச்சம்மானப் பொருள்களை அவதானித்துக்கொண்டிருந்தாள்; இராமன் உற்றுப்பார்த்தபடி நின்றான். நின்ற இராமனை இருந்த கண்ணகியம்மை பார்த்து "இராமன், அந்த ஐயா என்ன சொன்னார்" என்று கேட்க, இவைகளைக் கொண்டுவந்து இங்கே கொடுக்கும்படி சொன்னார்: அதோடு இன்றைக்கும் நாளைக்கும் நல்லநாள்; இவை போனால் இந்த மாசத்திலே சுபகாரளில்லை; அடுத்த மாசம் புரட்டாதி ஏதோ எல்லாம் ஆண்டவனருள் என்று பெருமூச்சோடுசொன்னார் ஆச்சி'. எனலும், "இதனையும், எங்களிடஞ் சொல்லும்படி அவர் சொன்னார்" என்று கண்ணகிகேட்க, "உங்களுக்குச் சொல்லும்படி சொல்லவுமில்லை, சொல்லவேண்டாமென்று சொல்லவுமில்லை" என்றான் ராமன் கேட்ட கண்ணகி அதிகம் யோசித்தாள்; "இந்தக் கல்யாண முயற்சியும் சம்மதமும் எங்கள் முயற்சியால் வந்தனவல்ல; நாமொன்றை நினைத்துப் பயணம் புறப்படத் தெய்வம் வேறொன்றை நினைத்துவிட்டது; அந்த மாசத்தில் இன்றும் நாளையுமே கடைசி நாட்களாம்; அடுத்தமாசம் கல்யாணத்திற்கு ஆகாத மாசமாகும்; அது ஒகிய மாசமாகவிருந்தால் எங்கள் மகனிருக்குமிடம் சேர்ந்தவுடனே கல்ல முறையில் இவர்களுக்குக் கல்யாணம் செய்துவைக்கலாம்; அது முடியாதபோது இனி அடுத்ததற்கடுத்த மாசந்தான் நாள்பார்த்துச்செய்யவேண்டி வரும்; அவ்வளவு காலமும் தவணையிட்டு வைப்பது புத்தியல்ல; அங்கேயூரிலே பெண் வேறு மாப்பிள்ளைவேறுக இருப்பதற்காகிய ஒழுங்குகளைச் செய்து வைப்பதுஞ் சங்கடம்; இந்தக்கால நாகரிகத்தின்படி பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஓரிரவரையொருவர் காணவும் ஒருவரோடொருவர் பேசவும் வைத்துப் பிறகு சுபவேளை பார்த்துக் கல்யாணஞ் செய்து வைக்கலாமோவென்றால் புற்றரை பாம்பைவைத்தாட்டுவது புத்தியல்ல என்று எங்கள்முதியோர் சொல்லும் பழமொழியு முண்டு....." என்று இப்படியே பலவாறு எண்ணிக் கொண்டிருந்தாள். (மேலும்)

பதவி ஏற்கோம்

சமசமாஜிகள் நிலை

சென்ற புதன்கிழமை அவிசாவலைத்தொகுதியின் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும், அத் தொகுதியில் வெற்றிபெற்ற சமசமாஜக் கட்சித் தலைவர் மிஸ்டர் பிலிப் குணவர்த்தனு வாக்காளர்க்கு நன்றி கூறிப் பேசினர். அப்போது அவர், சமசமாஜகக்கட்சி, அடுத்த பாராளுமன்றசபையில் பதவி ஏற்கமாட்டாது எனறும், ஆனல் யோக்கியமும் நேர்மையும் உடையவர்கள் அரசாங்கம் நடத்துவதில் உதவிசெய்யும் என்றும் கூறினர்

ஏனைய தேர்தல் விபரங்கள் வருமாறு:—

ஹொரணை

ஹொரணையில் மிஸ்டர் எ. பி. ஜெயசூரிய என்னும் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர் ஓர் சமசமாஜியை 665 வாக்குகளால் வெற்றிகொண்டார்.

வரியப்புவ

வரியப்புவையில் மிஸ்டர் ஜுவன் நிஸா நாயக்கா என்னும் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகர் 9905 வாக்குக்களால் வெற்றிபெற்றார்.

தெனியாய

இங்கே கட்சிப்பற் முள்ளவர்கள் போட்டி யிடவில்லை. எல்லோரும் சுயேச்சை வாதிகளாக நின்றனர். மிஸ்டர் விக்டர் ரத்நாயக்கா என்பவர் வெற்றிபெற்றார்.

மூதூரில்

கிழக்காகாணத்தைச் சேர்ந்த மூதூரில் மிஸ்டர் ஏ. ஆர். ஏ. எம். அபுபக்கர் என்னும் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர் 1720 வாக்குக்களால் ஓர் சமதர்மியையும் இரண்டு தமிழ்ச் சுயேச்சை வாதிகளையும் வெற்றிகொண்டார்.

பருத்தித்துறை

பருத்தித்துறைத் தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் ஸ்ரீ ரீ. ராமலிங்கம் 4188 அதிகப் படியான வாக்குச் சம்மதங்கள் பெற்று வெற்றி கொண்டார்.

விபரம் வருமாறு:—

ஸ்ரீ ரீ. ராமலிங்கம் (த. கா.)	10396
ஸ்ரீ லி. தர்மகுலசிங்கம் (சமசமாஜி)	6108
ஸ்ரீ வி. சுப்பையா (சுயேச்சை)	3897
ஸ்ரீ பீ. கந்தையா (சமதர்மி)	3492
பழுதான சீட்டுக்கள்	446
	24339

'ஹிட்லர்' கந்தசாமி

ஒப்புவிக்கப்படமாட்டார்

"ஹிட்லர்" கந்தசாமி என வழங்கும் திரு. A. R. கந்தசாமி என்பவர் கிழக்குத் தஞ்சாவூர் நீதிபதியினல் முக்கி இரண்டுவருஷக் கடுங்காவல் தண்டனையும் 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டார். அவர் அப்படி விதிக்கப்பட்ட தண்டனையை அநுபவிக்காது இலங்கைக்குத் தப்பி வந்துவிட்டார். அவரை மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பவேண்டும் என்று இந்திய அரசாங்கம் விருத்து அனுப்பியது. அந்த விருத்து சம்பந்தமான விசாரணையைப் பருத்தித்துறை நீதிபதி விசாரணை செய்து, திரு. கந்தசாமி இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பவேண்டும் என்று தீர்ப்பளித்தார். இத்தீர்ப்புக்கு விரோதமாக திரு. கந்தசாமி கொழும்பு உயர்தர நீதிமன்றத்துக்கு மனுச்செய்தார்

உயர்தர நீதியரசர் மதுவை விசாரணை செய்தபின்னர், இந்திய அரசாங்கம் விடுத்த விருத்தில் பல தூரமான தம்சங்கள் இருப்பதால், அது சட்டப்படி செல்லுபடியாகாது என்றும ஆகையினல், ஸ்ரீ கந்தசாமி இந்திய அரசாங்கத்திடம ஒப்புவிக்கப்பட வேண்டியதில்லை என்றும்தீர்ப்புக்கூறினர்.

திரு. கந்தசாமிக்காக நியாயவாதிகள் எச். வீ. பெரீரா, ஏ டபிள்யூ. தம்பையா, எச். மனிகத் தங்கஸ். மகாதேவன் என்பவர்கள் ஏற்பட்டனர்.

கட்சிகள் நிலைமை

கடைசியாக வெளிவந்த விபரத்தின நிலைமை வருமாறு:

ஐ. தே. கட்சி	12
இடதுசாரிகள்	7
சுயேச்சைவாதிகள்	3
தமிழ்க் காங்கிரஸ்	3

பாஞ்சாலநிலைமை

120,000 பேர் வெளியேறினர்

பாகிஸ்தான் பிரதேசத்துக்குச் சொந்தமான மேற்குப் பாஞ்சாலத்தி லிருந்து 120,000 சீக்கியரும், ஹிந்துக்களும் வெளியேறிவிட்டனர். இவர்கள் கிழக்குப் பாஞ்சாலத்திற் குடியேறுவார்கள்.

வகுப்புக் கலவரம் நிகழ்ந்த மேற்குப் பாஞ்சாலத்துக்குப் பண்டிதநேரு மீண்டும் ஒரு முறை விஜயஞ்செய்து நிலைமையை நேரே அவதானித்து, இனியும் முஸ்லீம்களல்லாதவர்கள் அங்கே யிருப்பது ஆபத்து என்பதை உணர்ந்து அவர்களை வெளியேற்ற வழிகள் தேடினர். கிழக்குப் பாஞ்சாலத்திலே யுள்ள முஸ்லீம்கள், மேற்குப் பாஞ்சாலத்திற்குப்போக விரும்பினர். அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

விவாக விஞ்ஞாபனம்

[பூரணைந்தன்—பூமதி]

இந்த ஆவணிமீ 19உ (4—9—47) வியாழக்கிழமை இரவு 9 மணி வரையில் வரும் சுபமுகூர்த்தத்தில், உரும்பராய் வடக்கு திரு.சி.கந்தையாஅவர்களின் இரண்டாம்புதல்வரும், கொழும்புக் கடிதப்பகுதிக் காரியாலயத்தில் உத்தியோகம் வகித்திருப்பவரும் ஆகிய திருவளர் செல்வன் பூரணைந்தனவர்கட்கும், ஷையூர் திரு. மூ. செல்லையா அவர்களின் இளையபுத்திரியாகிய திருவளர் செல்வி பூமதிக்கும், மணமகளில்லத்திலேயே விவாகம் நிறைவேற்றி வைக்கத் திருவருள் முன்னிட்டுப் பெரியோர் நிச்சயித்திருப்பதால், அச்சமயம் சுற்றமித்திர சகிதமாகச் சமுகஞ்செய்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் மணமக்களின் பெற்றோர் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

உரும்பராய் வடக்கு.
29—8—47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவர்தம் கடன்

1 ம் பக்கத் தொடர்ச்சி

புராணமென வழங்கும் திருத்தொண்டர் புராணம்.

மேற்கூறிய சாத்திரங்களும் தோத்திரங்களும் சைவ சித்தாந்தத்தைப் பற்றி என்ன கூறுகின்றன என்பதைச் சுருக்கிக் கூறுவோம். கடவுளை அடையமுயல்வோன் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களையும்பற்றி நன்றாய் அறிதல்வேண்டும் பதி என்பவர்தான் கடவுள். அவர் அருவமாய் உருவமாய், அருவுருவமாய், அன்பு வடிவமாய், அறிவுப் பொருளாய் எவ்வகையில் வேண்டுமானாலும் அவ்வகையில் விளங்குவார் அவரது அருளே சக்தியெனப்படும். அவ்விறைவன் போக வடிவிலும், யோக வடிவிலும், வேக வடிவிலும் நடிப்பான். பசு பாசங்களும் பதியைப் போல் நித்தியமாயுள்ளன. பசுக்கள் எண்ணிலாதன. அவை இருள்மலத்தில் அழுந்திக் கிடக்கின்றன, அவைகள் செய்த நல்வினைகள் தீவினைகளுக்குத் தக்கவாறு இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றன. இறந்தபின்னரும் அவைகட்குப் போக்குவரவு உண்டு பாசம், மாயை, கன்மம், ஆணவம் என மூன்று. கடவுள் மாயையைக் கொண்டு உயிர்களுக்கு உடம்பையும் அகக்கரணம் புறக் கரணங்களையும் உலகம், செல்வம் முதலியவற்றையும் கொடுக்கிறார். இவற்றை அனுபவிப்பதற்குரிய விதிவிலக்குகளை கன்மமலத்தைக்கொண்டு உண்டுபண்ணுகிறார். ஆணவமலத்தைக்கொண்டு உயிர்கள் தன்னையறியவொட்டாதபடி மறைக்கப்பட்டுளது. உயிர்கள் தன்னையறிந்து தலைவனையறிந்து, தலைவனையடைய முயலவேண்டும். அவ்வுயிர்கள் சன்மார்க்க நெறியொழுகி, சரியை கிரியை, யோக ஞானங்களிற் பழகி இருவினையொப்பும், மலபரிபாகமும், திருவருட் பேறும் பெறுகின்றன. திருவருள் பெற்ற உயிர்கள் இறைவன் அடியையடைந்து அவனே தானேயாகி அவன் திருவடியைச் சேர்கின்றன என்பதே சைவசித்தாந்த முடிபாகும்.

இவ்வுயரிய சித்தாந்தச் செந்நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுதலே சைவர்கள் கடமையாகும். இதற்கென நம் தமிழகத்தில் அளவற்ற ஆலயங்களும் அறநிலையங்களும் உள்ளன. இச்சமயம் சிலவேளைகளில் தளர்வுறும். அப்போது அதனை வளர்க்கப் பெருமக்கள் தோன்றி திருவருள் பெற்று வெற்றி கண்டு சமயத்தை வளர்ப்பர். இவ்வாறு இது தளர்ந்து வளர்ந்துளளது. இப்போதும் பலவகையில் தளர்ந்த நிலையை அடைந்திருக்கிறது. சைவசமயம் என்றால் என்ன? சமய குரவர் யார்? சமய நூற்கள் எவை? அவற்றில் கூறப்படுவது என்ன? என்பனவற்றை சைவர்களிற் பெரும்பாலோரும் அறியாது போயினர். ஆலயங்கள் தாம் ஆற்ற வேண்டிய கடமைகளில் பிழைத்தன. அற நிலையங்கள் புறச் சடங்குகளில் ஒழுகி, உண்மை உழைப்பினைத் துறந்தன. ஜாதிக் கொடுமை, உயிர்ப்பலி, குடிவெறி முதலிய மூடப்பழக்கவழக்கங்கள் இதனுள் புகுந்தன. இவற்றால் சமயத்தைச் சீர்திருத்தி வளர்க்குங் கடமையைக் கைவிட்டுப் பலர் பலவாறு இதனை இகழ்ந்து பேசி மறு சமயங்களில் மக்கள் சேரும்படித் தூண்டினர். வேறு சமயிகள் வேற்று நாடுகளிலிருந்து நமது நாட்டிற்குள் புகுந்து, கல்வி, மருத்துவம், ஊண், உடை, உறைவிடம் இவ்வுபகாரணங்களைக் கொண்டு இம்மக்களைத் தங்கள் தங்கள் மதங்களிற் சேர்க்கத் தொடங்கினர். வேற்று மதங்கள் வலுப்பெற்று சைவசமய மக்களைப் பலவகையில் தாக்கிப் பரிகசித்து இகழ்ந்துரைக்கமுற்பட்டனர். எவ்வகையிலும் இழிவுற்று நிலைகுலைந்து சைவசமயம் தயங்கித் தத்தளிக்கின்றது என்பதை வெட்கத்தோடு ஒத்துக் கொள்ளுகிறேன்.

பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4 - 48

சிந்தையை அடக்கல்

1-ம் பக்கத் தொடர்ச்சி

னாக எண்ணி அதையே தியானி' என்றார் குரு. அதன்படி நடந்த அம்மங்கையார்க்குக் கிருஷ்ணனிடம் பகதி முதிர்ந்தது; நாளடைவில் கிருஷ்ண பகவான் அக்குழந்தைவடிவமாகவே தரிசனம் அளித்தார். அடிக்கடி மற்ற வேளைகளில் எதைப்பற்றிச் சிந்தித்து வருகிறோமோ அதுவே தியானவேளையில் விலக்கமுடியாதபடி முன் நிற்கும். ஆதலின் அடிக்கடி பகவானைப் பற்றிச் சிந்தித்துவர முயலவேண்டும். இதைச் செய்தால் தியான வேளையில் மனம் பகவானிடம் எளிதாக அழுந்தும். பகவானுடைய நாமத்தையோ ஒரு மந்திரத்தையோ இயன்றமட்டும் எந்த சமயத்தும் உச்சரித்தலும், அன்போடு தியானித்தலும், மிக்க நன்மையைத் தரும் எந்த வேலையைச் செய்ய நேருகிறதோ, அதில் முழுமனத்தையும் செலுத்தப் பழகவேண்டும்; அது முடிந்ததும் இன்னொரு அலுவலிலும் அப்படியே செய்தல் வேண்டும்: இரண்டு அலுவல்கட்கிடையே பகவானைப்பற்றிய சிந்தனையில் சிறிதுநேரம் கழித்தல் நன்று. மனம் ஒரு சிசுவைப் போன்றது; பாற்குப்பியை வாயில் வைத்தால் சிசு அதை உறிஞ்சிக் கொண்டே சும்மா கிடக்கும்; இல்லாவிட்டால் கத்தும். ஏதாவது ஓர் உணவு மனதிற்கு வேண்டும். மனம் அலையத் தொடங்குமுன், ஜாக்கிரதையாகத் தியான விஷயத்தை அதற்குக் கொடுத்தல் வேண்டும். புதிய உணவானாலும் குற்றமில்லை; சிலநாட்களில் ருசி உண்டாகும்; ருசி கண்டபின் அதை விடாது. ஆதலால் பகவத் சிந்தனையென்ற பாற்குப்பியை எப்போதும் தயாராக வைத்திருத்தல் நலம். மனம் வேலையின்றித் தத்தளிக்கும்போதும் திரியும்போதும், அதைக் கொடுத்துப் பழக்கவேண்டும். எதைக் கொடுத்தாலும் அதை உறிஞ்சும் குணமுடைய சிசுவைப் போன்றது மனம்; இதை உணர்வார் வேண்டியவாறு அதைப் பழக்கலாம்: சாதனையில் விருப்பமுடையார் இதுவரையிற் கூறிய (பெரியார் கண்ட அரும் பெரும் உண்மைகளை ஊன்றிப் படித்துச் சிந்தித்துப் பயன் பெறுவாராக.

இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூபா	4, 500, 000, 00
கொடுக்கப்பட்ட வேதனம்	,,	3, 000, 000, 00
சேமநிதி	,,	2, 600, 000, 00

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விள் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கினேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

(Std 29 1-8—30 7-48) (F)

கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினாங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:
எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்
[விள்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48

விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முரசு பொன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனால் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்றான் இந்த உண்மைகள் உங்களுக்குப் புலப்படும்.

பத்திராணா மாளிகை
[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna on Friday, August 29, 1947

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org